இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 324 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 21 – ஞாயிற்றுக்கிழமை 05 ஜூலை 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 324 : Thiruvalluvar Year - 2057 - Aani 21 - Sunday 05 July 2026 - Chennai 12 Pages ₹ 5.00

## அயலகம் புறப்பட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை விமான நிலையத்தில் நேற்று கழகத்தினர் உற்சாகமாக வழியனுப்பி வைத்தனர்!







நேற்று (04.07.2026), திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத் தொண்டர்களின் வாழ்த்துகளுடன் இரு வாரகாலப் பயணமாக அயலகத்துக்குப் புறப்பட்டார்.

## ரூ.50 கோடி, அமைச்சரவையில் இடம் – தி.மு.க. எம்.எல்.ஏ.க்களிடம் பேரம்!

# சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் த.வெ.க. அரசு!

## ஆளுநரை நேரில் சந்தித்து தி.மு.க. சார்பில் புகார்!



**சென்னை, ஜூலை 5-**

**தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர் பி.வில்சன், எம்.பி., எஸ்.ஆஸ்டின், எம்.எல்.ஏ., சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் ஆளுநரிடம் புகார் கடிதம் வழங்கினர்.**

கடந்த 1.7.2026 அன்று ஆளுநர் அவர்களுக்கு அனுப்பட்ட புகாரில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்து குறித்து கடிதம் எழுதப்பட்டது. அது குறித்து நேற்று ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட சீர்காழி மற்றும் கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்யச் சொல்லி, இடைத்தேர்தலில் த.வெ.க.கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெறச் செய்வதாக வைகோ அவர்கள் அளித்த செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் தெரிவித்ததை ஆளுநர் அவர்களிடம் தெரிவித்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

### அனிதா ராதாகிருஷ்ணனுக்கு காவல் துறை மூலம் மிரட்டல்!

திருச்செந்தூர் தொகுதி கழக சட்டமன்ற உறப்பினர் அனிதா இராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ., அவர்களை அவதூறு வழக்கில் கைது செய்து தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஐந்து மணி நேரம் அடைத்து வைக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. கட்சியில் இணைந்திட வற்புறுத்தியதை ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

நாகர்கோவில் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் அவர்களை த.வெ.க.சார்பில் அவரை தொடர்பு கொண்டு சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க. கட்சியில் இணைந்திட வலியுறுத்தியதுடன், அவர் விரும்பிய துறை அமைச்சர் பதவி கொடுப்பதாக நிர்ப்பந்தித்தது குறித்தும் ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

### விலை பேசப்படும் எம்.எல்.ஏ.க்கள்!

வேப்பனஹள்ளி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் அவர்களையும் த.வெ.க. கட்சியில் இணையும் படியும், 50 கோடி ரூபாய் கொடுப்பதாகவும் வாரியத் தலைவர் பதவி அளிப்பதாகவும் ஆசைக்காட்டி அவரது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்திட பேசியதாக ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் நண்பர்கள், ஜான்ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணுரெட்டி ஆகியோர் அரசு அலுவல்களில் தலையிடுவதையும் - அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டதையும் மற்றும் அவர்களுக்கு தலைமைச் செயலகத்தில் தனியாக அறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறித்தும் - அதேபோல், முதலமைச்சரின் பாதுகாப்பு விதிகளுக்கு முரணாக முதலமைச்சர் அவர்களின் தனி பாதுகாவலர் ஒருவர் பணியாற்றி வருவதும், அவர் முதலமைச்சர் அலுவலகம் உள்ளிட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் முதலமைச்சருடன் சட்டத்திற்கு புறம்பாக அவருடைனே பயணிப்பது குறித்தும் ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

### ஆளுநர் நடவடிக்கை எடுத்திட கோரிக்கை!

மேற்சொன்ன புகார்களை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நாகர்கோவில் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர் பி.வில்சன், எம்.பி., சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் ஆகியோர் விளக்கமாக எடுத்துரைத்து, புகார் கடிதத்தை தமிழக ஆளுநர் அவர்களிடம் அளித்தனர். அனைத்து புகார்களையும் - புகார்களின் சாராம்சங்களையும் கவனமுடன் கேட்டறிந்த ஆளுநர் அவர்கள், இதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

### ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

ஆளுநர் அவர்களை நேரடியாகச் சந்தித்து புகார் அளித்த பின்னர், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களின் பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டுள்ள குதிரை பேரம் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்து ஆளுநரிடம் நேரடியாக விளக்கினோம். அரசிற்குத் தொடர்பில்லாத ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணுரெட்டி ஆகிய இரண்டு பேர் அமைச்சரவைக் கூட்டங்கள் முதல் அனைத்து உயர்மட்டக் கூட்டங்களிலும் முதல்வரோடு கலந்து கொண்டு அதிகாரிகளுக்கு உத்தரவு போடக்கூடிய கேவலமான நிலை உள்ளது. இதுபற்றி கடந்த 2 ஆம் தேதி புகார் மனு அளித்திருந்தோம். இன்று நேரிலும் அதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டுக்கொண்டோம். ஆளுநரும் அவர்கள் அரசு கூட்டங்களில் கலந்து கொள்ள எந்தவித அதிகாரமும் கிடையாது எனற நிலைப்பாட்டை வெளிப்படுதினார். எனவே அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

குதிரை பேரத்தின் உச்சமாக நேற்றைய தினம் அவதூறு வழக்கிலே திமுக எம். எல். ஏ அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். அவதூறு வழக்கில் கைது செய்யும் நடைமுறை இது வரை இருந்ததில்லை. ஆனாலும் அவரை கைது செய்து 5 மணிநேரம் காவல்துறை விசாரணை நடத்தி உள்ளனர். அவதூறு வழக்கில் விசாரணையே தேவையில்லை அப்படி இருக்க விசாரணை என்ற பெயரில் குதிரை பேரம் நடத்தினர் என அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களின் பேட்டியிலேயே தெரியவந்தது. தவெக வில் இணைந்துவிடுங்கள் என பேரம் பேசி உள்ளனர்.

அதேபோல திமுகவின் துணை அமைப்புச் செயலாளர் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் அவர்களை தொடர்பு கொண்டு எந்த அமைச்சர் பதவி கேட்கிறீர்களோ அந்த இலாக்காவை தருகிறோம் எம். எல். ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு வாருங்கள் என பேரம் பேசி உள்ளனர்.

அதோடு வேப்பனஹல்லி சட்டமன்ற தொகுதி எம். எல். ஏ வாக வெற்றி பெற்றுள்ள சீனிவாசன் அவர்களை தொடர்பு கொண்டு ‘50 கோடி ரூபாய் தருகிறோம் என்ன வாரியம் கேட்கிறீர்களோ அதை கொடுக்கிறோம்’ பதவியை ராஜினாமா செய்யுமாறு பேரம் பேசி உள்ளனர்.

### ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறோம்!

இது அனைத்தையும் புகாராக ஆளுநரிடம் அளித்துள்ளோம். ஆள்பிடிக்கும் பணியை தவிர ஆக்கப்பூர்வமான பணிகள் எதையும் இந்த தவெக அரசு செய்யவில்லை என்பதையும் தெளிவாக ஆளுநரிடம் எடுத்துக்கூறி உள்ளோம். நாங்கள் அளித்துள்ள புகார் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் கூறியுள்ளார்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.